பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 08 2024 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. பாதுகாப்பு தளவாடங்களின் உள்நாட்டு உற்பத்தி ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட டெங்கு காய்ச்சல் தடுப்பூசிக்கான மூன்றாம் கட்ட பரிசோதனை இன்று தொடங்கியது.

4. ரஷ்யாவின் **Bryansk, Belgorod** மற்றும் **Kursk** பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

5. 18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டி சீனாவின் **Chuzhou**–வில் இன்று தொடங்கியது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<<>>>>>>

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

78-ஆவது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் வாயிலாக நாட்டு மக்களிடையே இன்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வளரும் நாடுகளின் குரலை வெளிப்படுத்தும் நாடாக இந்தியா உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சமூக நீதியை உறுதி செய்வதற்காக இதுவரை இல்லாத அளவிற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார். இதற்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த பத்தாண்டுகளில் மூன்று மடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுப்பதற்கு அனைவரும் பங்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். இதன்மூலம் காலனி ஆதிக்கம் அகற்றப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய குற்றவியல் சட்டங்களின் நோக்கம் தண்டனைக்கானது அல்ல, நியாயத்திற்கானது என்றும் அவர் கூறினார்.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்படுவதை உறுதி செய்வதுதான் சுதந்திரப்போராட்ட வீரர்களுக்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாக இருக்கும் என்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

இளையோரின் நலனை கருத்தில்கொண்டுதான் தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன் பலன்கள் தற்போது கிடைக்க தொடங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

டிஜிட்டல் பயன்பாட்டில் பிற நாடுகளுக்கு முன்னோடியாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

விண்வெளித்துறையிலும் பல்வேறு சாதனைகளை இந்தியா படைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் அடுத்த ஆண்டு செயல்பாட்டிற்கு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

விளையாட்டுத்துறையிலும் கடந்த பத்தாண்டுகளில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியிருப்பதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை இந்திய வென்றிருப்பது கிரிக்கெட் ஆர்வலர்கள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

செஸ், பேட்மிண்டன், டென்னிஸ் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப்போட்டிகளிலும் இந்தியா சாதனை படைத்து வருவதாக அவர் கூறினார்.

அண்மையில் முடிவடைந்த பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்களின் செயல்பாடுகள் சிறப்பாக அமைந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நம் நாட்டில் மக்களவைத் தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பது ஒட்டுமொத்தமாக உலகின் ஜனநாயக சக்திக்கு வலுசேர்த்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்ததற்காக தேர்தல் ஆணையத்திற்கும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறினார்.

சுதந்திர தினத்தையொட்டி நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

நாட்டிற்காக தங்கள் உயிரை பணயம் வைத்து பணியாற்றிவரும் முப்படைகளை சேர்ந்தவர்களுக்கும், இந்நாளில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறினார்.

வெளிநாடுவாழ் இந்தியர்கள் நம் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் பெருமைமிகு பிரதிநிதிகளாக திகழ்வதாகவும், அவர்களுக்கும் இந்நாளில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றவுள்ளார்.

2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் என்பதை மையக்கருத்தாக கொண்டு இந்த ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், ஆறாயிரம் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர், விவசாயிகள், மகளிர், இளையோர் ஆகியோர் இந்த சிறப்பு அழைப்பாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அங்கன்வாடி பணியாளர்கள், பஞ்சாயத்து அமைப்புகளின் மகளிர் தலைவர்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலகங்களில் பணியாற்றுபவர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 23 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக சுதந்திர தின நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

இந்த வாய்ப்பினை வழங்கிய மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக கோவளம் ஊராட்சி மன்றத் தலைவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**mygov** இணையதளம் மற்றும் ஆகாஷ்வாணியுடன் இணைந்து பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய இணையதள போட்டிகளில் வெற்றிபெற்ற மூன்றாயிரம் பேரும் இதில் பங்கேற்கின்றனர்.

<<<<<<<>>>>>>

பாதுகாப்புத்துறையில் சுயசார்பை எட்ட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சுதந்திர தினத்தையொட்டி பாதுகாப்புப்படை வீரர்களிடையே, அகில இந்திய வானொலி வாயிலாக இன்று அவர் உரையாற்றினார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ஆறு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்களின் மதிப்பு ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பங்கேற்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று ஹைதராபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தேசப்பற்றை போற்றும் வகையில் இந்த இயக்கம் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>

டெங்கு காய்ச்சல் தடுப்பூசிக்கான மூன்றாம் கட்ட பரிசோதனை தொடங்கியுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுமமும், **Panacea Biotec** நிறுவனமும் அறிவித்துள்ளன.

**Rohtak**–ல் உள்ள மருத்துவ அறிவியல் மையத்தில் இந்த மூன்றாம் கட்ட பரிசோதனையின்கீழ் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக இந்த இரண்டு நிறுவனங்களும் கூட்டாக அறிவித்துள்ளன.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனை தொடங்கியிருப்பது மருத்துவ ஆராய்ச்சியில் ஒரு மைல்கல்லாகும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

இந்த தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளதன் மூலம், தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் நம் நாட்டின் திறன் உலகிற்கு உணர்த்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

டெங்குக்கு எதிராக உரிமம் பெற்ற எந்தவொரு தடுப்பூசியும் தற்போது பயன்பாட்டில் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>

தெலங்கானாவிலிருந்து மாநிலங்களவை உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் காங்கிரஸ் சார்பில் திரு அபிஷேக் மனு சிங்வி போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

ரஷ்யாவின் **Bryansk, Belgorod** மற்றும் **Kursk** பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அந்நாட்டிற்கான இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. சமீபத்தில் நடந்த பாதுகாப்பு தொடர்பான சம்பவங்களை சுட்டிக்காட்டி, இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் தற்காலிகமாக பிற பகுதிகளுக்கு செல்லுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டி சீனாவின் **Chuzhou**–வில் இன்று தொடங்கியது.

இந்தியா முதல் ஆட்டத்தில் பிரான்சிடம் தோல்வியடைந்தது.

நாளை நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா – பிரேசிலை எதிர்கொள்கிறது.

------------

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக தென்னாப்பிரிக்காவின் **Morne Morkel** நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலர் திரு **Jay Shah** இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

-------------

கேரளா மற்றும் இமாச்சலப்பிரதேசத்தில் நேரிட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவியை திரட்டுவதற்கென இரண்டு போட்டிகள் நடத்தப்பட உள்ளதாக அகில இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன்படி முதல் போட்டி கேரள மாநிலம் மலப்புரத்தில் உள்ள **Manjeri**-யில் வரும் 30-ஆம் தேதி நடைபெறுகிறது. இப்போட்டியில் **Mohammedan Sporting Club** அணி - **Super Leaque Kerala** அணியை எதிர்கொள்கிறது. இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 2-ஆம் தேதி லக்னோவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பங்கேற்கவுள்ள அணியின் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<END>>>>>>